# யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
# பரிசுத்தினம் – 2006

## அதிபர் அறிக்கை

**பிரதம விருந்தினர் :**

**கலாநிதி குணசிங்கம் மிகுந்தன் அவர்கள்**
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்.

**பரிசில் வழங்கல் :**

**திருமதி துஷியந்தி மிகுந்தன் அவர்கள்**
தலைவர், விவசாய இரசாயனவியல்துறை,
விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்.

# PRIZE DAY - 2006
# PRINCIPAL'S REPORT

***CHIEF GUEST:***

**Dr. Kunasingam Mikunthan**
*Head, Dept.of Agricultural Biology*
*Faculty of Agriculture*
*University of Jaffna.*

***DISTRIBUTION OF PRIZE'S***

**Mrs. Dusijanthi Mikunthan**
*Head, Dept.of Agricultural Chemistry*
*Faculty of Agriculture*
*University of Jaffna.*

***J/ Jaffna Hindu Primary School***
***2007-02-03***

# நிகழ்ச்சி நிரல்

- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- அக வணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- ஆசியுரை - *சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள்*
- அதிபர் அறிக்கை
- மாணவர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல் - *திருமதி. துஷியந்தி மிகுந்தன் அவர்கள்*
  தலைவர் ,விவசாய இரசாயனவியல்துறை
  விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்.
- நன்றியுரை - *திரு. சு. தியாகலிங்கம் அவர்கள்*
  பிரதி அதிபர்
- பாடசாலைக் கீதம்

## ஆசியுரை

அருளும், அன்பும் அறிவும் இணைந்து நிற்கும் இடம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. ஆதலால் ஆலயமும் பாடசாலையும் அருகருகே அமைந்து தெய்வீகத் தன்மையைத் தரிசனமாக்கி விளங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய புனிதம் வாய்ந்த சந்நிதானத்திலே புகழ்பூத்த மாணவமணிகள் அறிவை வளம்படுத்திக் கொள்கின்றனர். சைவச்சிறார்கள், சைவப் பாரம்பரியப் பண்பில் கல்வியைப் பெறும் வாய்ப்பு இங்கு கிடைத்திருப்பது சைவ அன்பர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

கொண்டலடி விநாயகப் பெருமானின் திவ்விய கடாட்சம் மீதூரப் பெற்று இவ் ஆரம்ப பாடசாலையை வளம்படுத்தவெனத் துடித்து நிற்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகிய அனைவருக்கும் அன்பும், அருளும், பேறும் பெருக எமது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்,
யாழ்ப்பாணம் — பிரதமகுரு, கொண்டலடி விநாயகர் தேவஸ்தானம்,

# பரிசுத் தினம் - 2006
# அதிபர் அறிக்கை

**கொண்டலடி விநாயகப் பெருமானது பாதார விந்தங்களைப் பணிந்து,**
**பிரதம குரு சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களே!**
**இன்றைய பரிசுத்தின நன்னாளிலே பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்**
**கொண்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக விவசாயபீட விவசாய உயிரியல்துறைத் தலைவர்**
**கலாநிதி குணசிங்கம் மிகுந்தன் அவர்களே!**
**பரிசில் பெறும் பாலர் கரங்களுக்கு உரமூட்டி உயர்ந்தோராக்கும் உயரிய சிந்தனையுடன்**
**வந்திருக்கும் யாழ் பல்கலைக்கழக விவசாயபீட, விவசாய இரசாயனவியல்துறைத் தலைவர்**
**திருமதி துஷியந்தி மிகுந்தன் அவர்களே!**
**யாழ். கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே!**
**நல்லூர்க் கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. வி. குணசேகரம் அவர்களே!**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்களே!**
**நிர்வாகப் பணி உயரதிகாரிகளே!**
**முதன்மையாசிரியர்களே!**
**இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே!**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளர் அவர்களே!**
**உறுப்பினர்களே!**
**பழைய மாணவர் சங்க கௌரவத் தலைவர் அவர்களே!**
**உறுப்பினர்களே!**
**சகோதர பாடசாலை அதிபர்களே!**
**அன்பார்ந்த பிரதி அதிபர் அவர்களே! பகுதித் தலைவர்களே! ஆசிரியத் திலகங்களே!**
**பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!**
**மாணவச் செல்வங்களே!**

*உங்கள் அனைவரையும் அன்பு கூர்ந்து, நெஞ்சில் இருத்தி வருக வருகவென வரவேற்று, யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் 2006 ஆம் ஆண்டிற்கான பரிசுத்தின அதிபர் அறிக்கையை உங்கள்முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.*

### பிரதம விருந்தினர் அவர்களே!

வடமராட்சியின் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் ஆரம்பக் கல்வியை யா/மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலம் இடைநிலைக் கல்வியையும், உயர்கல்வியையும் யா/ஹாட்லிக் கல்லூரியில் கற்றுப் புகழ்பூத்த மாணவனாக விளங்கியதோடு பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக்கொண்டீர்கள்.

உயர்நிலைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 1985 - 1989 காலப்பகுதிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானக் கல்வியைப் பயின்று விவசாய விஞ்ஞானப் பட்டதாரியானீர்கள். தங்களின் தகைமை சார்ந்த பட்டத்தினாலும், பட்டறிவினாலும் 1992 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விரிவுரையாளராகப் பணியினை ஆரம்பித்தீர்கள். பணியில் ஒன்றிய மூன்று ஆண்டுகளில் வாண்மை விருத்தியை மேற்கொள்ளும் முகமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1995 - 1998 ஆகிய காலப் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு விவசாய விஞ்ஞான முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். இக்காலப் பகுதியில் தாங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு விவசாய உயிரியல் துறையின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டீர்கள். இந்நிலையில் 2001 - 2005 காலப்பகுதியில் பெங்களூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் இணைந்து கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டீர்கள்.

மிகக் குறுகிய காலப்பகுதியில் தனது இளமைத்துடிப்புடன் மிக உயர்ந்த பதவி நிலைகளில் அணிசெய்வதற்கு தங்களிடமிருந்த தளராத முயற்சியும், அர்ப்பணிப்பும் தேடலில் இருந்த அளவுகடந்த ஆர்வமும், அநுபவமுமே கைகொடுத்தன என்றால் அது மிகையாகாது. தங்களின் ஆய்வுக்கட்டுரைகள் 22 உலகப் பிரசித்தி பெற்றவையாக அமெரிக்கா, பெல்ஜியம், நெதர்லாந்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் அறிஞர்சபையில் சமர்ப்பணம் செய்து பாராட்டுப் பெற்றிருக்கின்றது என்பதே தங்களின் துறைசார் செயற்பாட்டின் வியத்தகு விரிவிற்கு எடுத்துக்காட்டாகும். பயிர்ப்பாதுகாப்பு, இயற்கையுடனிணைந்த விவசாயம், உயிரியல்துறை போன்ற தலைப்புக்கள் தங்கள் ஆய்வுப்புலத்தின் சில கூறுகளாகும்.

தமது அறிவுப் புலத்திற்கு அணிசேர்க்கும் ஆளுமைமிக்க இல்லறத்தில் புலமைசார்ந்த புத்திரர்களைப் பெற்ற பெருமைக்குரியவர். அவர்களை இப்பள்ளியில் தளிர்க்கச் செய்ததன்மூலம் அவர்கள் தேடித்தந்த பெருமையால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாதா என்றும் புன்முறுவல் பூத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் கற்ற காலங்களில் பாடசாலை அங்கத்தில் புகுந்து பள்ளிசிறக்க ஆற்றிய பணியினைக் கௌரவிப்பதாகவே தங்களை இன்று விருந்தாக ஏற்று மதித்து நிற்கின்றோம்.

### பிரதம விருந்தினர் அவர்கள்தம் பாரியார் அவர்களே!

தென்மராட்சியின் உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் ஆரம்பக்கல்வியை உசன் மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டீர்கள். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானப் பட்டத்தை 1989 களில் பெற்றுக்கொண்டதோடு 1992 காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தில் விரிவுரையாளர் பணியை ஏற்றுக்கொண்டீர்கள். தங்களின் அயராத முயற்சியின் பயனாக விவசாய முதுதத்துவ மாணிப் பட்டத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டீர்கள். இன்று தங்கள் பணியும் பயிற்சியும் உயர யாழப்பாணப் பல்கலைக்கழத்தின் விவசாய இரசாயனவியல்துறைத் தலைவராக விளங்குவதையிட்டுப் பெருமையும் பேருவகையும் கொள்கின்றோம். நீர் முகாமைத்துவம், மண்ணியலும் நீரும் என்ற தலைப்பிலான 20 க்கு மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள் பங்காளதேஸ், இஸ்ரேல் போன்ற நாடுகளில் முன்வைக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றதோடு இம்மாதத்தில் தாங்கள் அமெரிக்காவில் இவ்வாய்வுகளைச் சமர்ப்பணம் செய்யச் செல்லவுள்ளீர்கள் என்ற மகிழ்வூட்டும் செய்தியோடும் இன்று இப்பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்க வந்துள்ள தாங்கள் பல்கலைக்கழகச் சேவையுடன் நின்றுவிடாது எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிநிலைச் சேவையை நினைவுகூர்ந்து தங்களுக்களிக்கும் மதிப்பார்ந்த கௌரவமாகவே நாம் தங்களை வரவேற்று மகிழ்கின்றோம்.

### கல்விப் பணியில் கருத்தூன்றி நிற்கும் உத்தியோகத்தர்களே!

எமது பாடசாலையின் திட்டமிடல் கல்வி அபிவிருத்தி, மேற்பார்வை, வளப்பங்கீடு, நிதிமுகாமைத்துவம், பௌதிக முகாமைத்துவம் ஆகிய பல்வேறு துறைகளையும் மேற்பார்வை செய்தும், ஆலோசனை

வழங்கியும் ஒழுங்படுத்தியும் வளப்படுத்த உதவி நல்கிய யாழ்ப்பாணக் கல்வி வலயக் கல்விப் பணிப் பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர், பாடத் துறை சார்ந்த ஏனைய உதவிக் கல்விப் பணிப்பா ளர்கள், பாடசாலைக் கட்டிடப் பகுதிப் பொறியிய லாளர், உத்தியோகத்தர்கள், முதன்மை ஆசிரி யர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனை வருக்கும் இப்பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பரிசில் அன்பளிப்பு:

எமது பாடசாலை மாணவர்களின் வருடாந்த பரிசுத்தின வைபவத்தில் மாணவர்களுக்கான பரிசில் களை உதயன் பத்திரிகை நிறுவன இயக்குநர் திரு. ஈ.சரவணபவன் அவர்கள் தமது அன்புத் தந்தையார் **அமரர் இளையதம்பி ஈஸ்வரபாதம்** அவர்களின் ஞாப கார்த்தப் பரிசாக அள்ளி வழங்கியுள்ளார். 891 மாண வர்கள் இம்முறை பரிசில் பெறுகின்றார்கள். பரிசில் களின் எண்ணிக்கை அதிகரித்த போதும் ஞாபகார்த்த அன்பளிப்பாக ரூபா 30000 ஐ நிறைந்த மனத்தோடு உரிய காலத்தில் தாராளமாக வழங்கி வருகின் றார்கள். இப்பரிசில்கள் யாவும் மாணவச் செல் வங்கள் பெறுகின்ற வெற்றிப் பதக்கங்களாக அணி செய்துகொண்டு இருக்கின்றன. இப்பேருதவிகளைப் புரிந்துவரும் உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக் கும், விசேடமாக அதன் இயக்குநர் திருவாளர் ஈ. சரவணபவன் அவர்களுக்கும், அவர் குடும்பத்தின ருக்கும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன். அத்துடன் இப் பரிசில் இணைந்து கொண்ட பெற்றோர்களுக்கும் எனது பாராட்டுகளும் நன்றி களும் உரித்தாகுக.

## கல்விச் சேவையின் நிறைவில்:

பகுதித் தலைவர் திருமதி ரூ. கிருஷ்ண பாலா ஆசிரியை அவர்கள் அகவை 60 இல் ஓய்வு பெற்றுள்ளார். அவர்கள் எமது பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலும், முகாமைத்துவக் குழுவிலும் முன்னின்று செயலாற்றியதுடன் ஆசிரியர் களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் பங்காற்றியவர்.

ஆசிரியையின் சேவையால் இப்பாடசாலை பெற்ற பயனையும், அநுபவத்தையும் நினைவுகூர்ந்து அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியும், குதூகலமும் பொலிந்து நீடூழிவாழப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

## புதிதாக சேவையில் இணைந்த ஆசிரியர்:

திருமதி சு. ஜெயரூபன் அவர்கள் முகாமைத் துவ உதவியாளராகக் கடமையாற்றி 2006.07.24 முதல் எமது பாடசாலையில் ஆசிரியச் சேவை யில் பட்டதாரி ஆசிரியராக உள்ளீர்க்கப்பட்டுள்ளார். அவர்களையும் மனமுவந்து வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## நனிசிறக்க வாழ்த்துகின்றோம்:

எமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றி கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்த செல்வி சி. சுந்தரேஸ்வரி அவர்கள் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டமையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் அவர்களது வாழ்வு நனி சிறக்க அவர் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

## முகாமைத்துவக் கட்டமைப்பு:

1. அதிபர் : திரு. வே. ஞானகாந்தன்
   பெருங்காப்பாளர்
2. உபஅதிபர் : திரு. சு. தியாகலிங்கம்
   காப்பாளர், நிதி நிர்வாகம்
3. பகுதித் தலைவர்கள்
   1. திருமதி ரூ. கிருஷ்ணபாலா
      கலைத்திட்ட அபிவிருத்தி
   2. திருமதி ல. மகாலிங்கம்
      இணைப்பாடவிதான அபிவிருத்தி
   3. திருமதி M.P.R. கனகரத்தினம்
      மாணவர் அநுமதியும், வரவு மேற்பார்வையும்

## வழிகாட்டலும் ஆலோசனையும்:

திரு. பொ. ஜெகானந்தராஜா

## நூலக உதவியாளர்:

திருமதி ஓ. ஜெகதீசன்

## தர இணைப்பாளர்கள்

தரம் 1 திருமதி நி. கிருபாகரன்
தரம் 2 திருமதி லோ. சிவகுமாரன்
தரம் 3 திருமதி கா. நாகராசா
தரம் 4 திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்
தரம் 5 செல்வி தா. குணரஞ்சினி

## பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்:

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவமணிகளை மையப்படுத்தி தன் நிழலிலே அணைத்து சைவப் பண்பாடு, விழுமியங்களுக்கு ஏற்ப கல்வியில் உயர்ந்து வருதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

| | |
|---|---|
| மாணவர் தொகை | 1166 |
| ஆண்கள் | 690 |
| பெண்கள் | 476 |

## அதிபர், ஆசிரியர் தொகை:

| | |
|---|---|
| அதிபர் | 01 |
| உபஅதிபர் | 01 |
| பகுதித் தலைவர் | 02 |
| வழிகாட்டலும், ஆலோசனையும் | 01 |
| ஆங்கிலம். | 02 |
| பயிற்றிப்பட்ட பட்டதாரிகள் | 04 |
| ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் | 23 |

## பயிற்சி நோக்கிய நகர்வும் வாண்மை விருத்திச் செயற்பாடும்:

இவ்வாண்டு எமது பாடசாலையில் இருந்து திருமதி பி. சரவணபவானந்தன் அவர்கள் ஆங்கில நெறி ஆசிரிய பயிற்சியைப் பெறுமுகமாகத் தெரிவு செய்யப்பட்டு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் குச் சென்றுள்ளார். பயிற்சியைச் சிறப்புற நிறை வேற்றி சேவையைத் தொடர வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இப்பாடசாலையில் சேவை ஆற்றிக்கொண்டே தேசிய கல்வி நிறுவகத்தில் B.Ed பயிற்சியை மேற் கொண்டு வந்த ஆசிரியை திருமதி ம. பத்மநாதன் அவர்கள் இவ்வாண்டிலேயே தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளார். அவர்களின் வாண்மை விருத்தி மேலோங்க வாழ்த்துகின்றோம்.

## இடமாற்றம் பெற்றோர்:

திருமதி. சி. அம்பிகைபாகன், திரு. சி. துரை ராசா, திருமதி சா. சுரேஸ்குமார் இவர்கள் மூவரும் இப்பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி இட மாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்கள். சேவைக் காலத் தில் எமது பாடசாலை மாணவர்களுக்கு ஆற்றிய சேவையை மனவிருப்புடன் பாராட்டுவதுடன் அவர்கள் செல்லும் பாடசாலையிலும் சேவை உயர்ந்து நிற்க வாழ்த்துகின்றேன்.

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்:

தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட் சைப் பெறுபேறுகளே இப்பாடசாலையின் தரக் காட்டி யாக உள்ளது எனலாம். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி அடைவதைத் தொடர்ந்து இப்பாடசாலை மாணவர் அநுமதியில் போட்டிகள் அதிகரித்துச் சென்றவண்ணமேயுள்ளன.

வாரத்தில் மூன்று தினங்கள் மேலதிக வகுப்புக் களும், பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. அத்தோடு கற்பித்த விடயம் தொடர்பான மாதிரி வினாத்தாள்கள் மாதத்திற்கு நான்கு என்ற அடிப்படையில் ஒரு வருடத் திற்குத் தொடர்ச்சியாக நடத்தி 150 புள்ளிகளுக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் பிரகாரம் இவ் வாண்டு 22 பரீட்சைகளுக்கு பெற்றோர்கள் ரூபா 60000 வரை பரிசுப்பொருள்களாக வழங்கி எம் முயற்சிக்கு ஊக்கமளித்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் நூற்று இரண்டு (102) மாணவர்கள் சித்திபெற்று யாழ். மாவட்டத்தி லும், வடக்கு கிழக்கு மாகாணத்திலும் முதன்மைச் சாதனை படைத்துள்ளனர். அத்துடன் அகில இலங்கை ரீதியிலும் தமிழ்ப் பிரிவில் எமது பாட சாலை முதன்மைச் சாதனை படைத்துள்ளது என்ப தும் குறிப்பிடத்தக்கது. வெட்டுப்புள்ளி தவிர்ந்த நூறு புள்ளிக்கு மேல்நிலையில் நூற்று மூன்று மாணவர் களும், இறுதிப் புள்ளி 70 இற்கு மேல் நிலையில் அனைவரும் உள்ளமையும் பாராட்டுக்குரியனவா கும்.

| மாணவர் பெயர் | புள்ளிகள் | பாடசாலை நிலை | மாவட்ட நிலை | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| 1. க. வித்தியாசாகர் | 185 | 1 | 1 | 01 |
| 2. கௌ. லோகீசன் | 168 | 2 | 11 | - |
| 3. செ. லவீனன் | 168 | 2 | 11 | - |

இத்தகைய சாதனைகளைப் படைத்துப் பாட சாலையின் பெயரை மேலோங்கச் செய்த ஒவ்வொரு மாணவ மணிகளையும் மனம் நிறைந்து பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் மேலும் பல உயர்வுகள்பெற மனம்நிறைந்து வாழ்த்து கின்றோம். பரீட்சையில் தோல்வியைக் கண்டு துவண்டிருக்கும் ஏனைய மாணவர்களையும் முயற்சி திருவினையாக்கும் என்ற தத்துவக் கோட்பாட்டிற் கிணங்க முயற்சியுடன் வெற்றி பெறுக என்று வாழ்த்து கின்றோம்.

இம்முறை எமது பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற 19 மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இத்தகைய ஆற்றலை வளர்ப்பதில் தன் சுகம் மறந்து பொறுப்பேற்று வழிப் படுத்திய ஆசிரியர்களின் பணிகள் சிறப்பாகப் பாராட் டப்பட வேண்டியதொன்றாகும். இவ்வெற்றி 5 ஆண்டு களாக ஊக்குவித்து உயர்வுகாட்டிய இப் பாடசாலை யின் சகல ஆசிரியர்களின் ஒட்டுமொத்தமான பணியாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. எவ்வாறாயினும் குறிப்பாகப் பிரத்தியேகச் செயற் பாடுகளில் தம்மை அர்ப்பணிப்புடன் செயலாற்றிய செல்வி தா. குணரஞ்சினி அவர்கள், திருமதி மு. சுகிர்தா அவர்கள், திருமதி சி. விஜயகோபால் அவர்கள், செல்வி க. குவேனி அவர்கள், திரு. வே. அன்பழகன் அவர்கள், திருமதி த. தர்மரத்தினம் அவர்கள் சிறப்பாகப் பாராட்டத்தக்கவர்கள்.

அடுத்த ஆண்டின் படிநிலை மேம்பாட்டிற் காகத் தரம் 4 ஆசிரியர்கள் அனைவரும் இவ்வாண் டும் சிறப்பான சேவையை வழங்கியமைக்காகப் பாராட்டுகின்றேன். யுனிசெப் செயற்றிட்டத்தில் பின் தங்கிய மாணவர்களை வழிப்படுத்தும் விசேட கல்விச் செயல் நடாத்திவரும் செல்வி சீ. சுப்பிரமணியம் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களால் ஆசிரிய கௌரவிப்பு:

வருடந்தோறும் தம் குழந்தைகளின் நல்வாழ் விற்கு வழிகாட்டிய ஆசிரியர்களை சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு குழுவாகப் பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடியதான நல் லுறவை வளர்த்தலும், ஊக்குவித்தலுமான இத் தகைய ஒன்றுகூடலை ஏற்பாடு செய்து பாராட்டுதலும் உபசரித்தலும் வழக்கம்.

2006 ஆம் ஆண்டின் பாராட்டுக் குழுவின் தலைவ ரான திருமதி. J. இராசநாயகம் அவர்களையும், செய லாளரான திரு. கா. சுகேந்திரன் அவர்களையும், பொருளாளரான திருமதி சா. சுந்தரேஸ்வரன் அவர் களையும், அவர்களோடு இணைந்த ஏனைய பெற் றோர்களையும் பாடசாலைச் சமூக நல்லுறவை மேம் படுத்தியமைக்காக வாழ்த்துவதோடு எமது மனம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின் றோம். இத்தகைய செயற்பாடு பாடசாலையை முன் னிலைப்படுத்தும் நோக்குடையதாகவும் ஆசிரியர் களின் உத்வேகத்தைப் பெருக்கி, தம் பணியில் கருத்தூன்றி மகிழ்வுடன் செயற்பட வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

### பரிசளிப்பு விழாக்குழு:

**தலைவர்:**

திரு. வே. ஞானகாந்தன் - அதிபர்.

**செயலாளர்:**

திரு. சு. தியாகலிங்கம் - உபஅதிபர்.

**பொருளாளர்:**

திருமதி ல. மகாலிங்கம்

**உறுப்பினர்கள்:**

திருமதி கா. நாகராசா
திருமதி M.P.R. கனகரட்ணம்
திரு. பொ.ஜெகானந்தராசா
திரு. செ.ஸ்ரீநாகேஸ்வரன்
செல்வி தா. குணரஞ்சினி
திருமதி லோ. சிவகுமாரன்
திருமதி நி. கிருபாகரன்

பரிசுத்தின வைபவம் ஒவ்வொரு வருட இறுதி யிலும் நடாத்தப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கதா கும். இவ்வாண்டு இறுதியில் ஸ்திரமற்ற சூழ்நிலை காணப்பட்டமையால், இன்றைய நாளில் அது சிறப் பார்ந்த விழாவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வித்திட்டத்தின் பிரகாரம் தரம் 1 இல் கல்வி கற்கும் எல்லா மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். தரம் 2 தொடக்கம் தரம் 4 வரையில் மூன்று தவணைகளிலும் 75 சராசரிப் புள்ளிகளைப் பெறுபவர்கள் "OPTIMI" சான்றிதழை யும், பரிசில்களையும் பெறுகின்றனர். தரம் 5 மாண வர்கள் புலமைப்பரிசில் பரீட்சைச் சித்தியடிப்படை யிலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற திறமை அடிப் படையிலும் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப் படுகின்றனர். இதன் அடிப்படையில் முதன்மை நிலை ஒன்றில் 410 மாணவர்களும், முதன்மைநிலை இரண்டில் 276 மாணவர்களும், முதன்மைநிலை மூன்றில் 205 மாணவர்களுமாக 891 மாணவர்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### புலமைப்பரிசில் நிதியம்:

புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளி களைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதற்காகப் புலமைப்பரிசில் ஞாபகார்த்த நிதியம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 19 மாணவர்கள் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

## புலமைப்பரிசில் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்:

01. அமரர் திருமதி பேரம்பலம் பாக்கியலட்சுமி அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கங்கள் நான்கு (முன்னாள் ஆசிரியை) வழங்குவோர்:
    அன்னாரின் பிள்ளைகள்
    ரூபா 200,000/=

02. அமரர் திருமதி சிவமணி கந்தையா அவர்கள் (முன்னாள் ஆசிரியை) ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திரு. கந்தையா அவர்கள் (கணவர்)
    ரூபா 50,000/=

03. அமரர் கிருஸ்ணபிள்ளை நல்லதம்பி, நல்லதம்பி செல்லம்மா அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திரு. திருமதி வில்வநாதன் குடும்பம்
    ரூபா 10,000/=

04. அமரர் நல்லையா இராசகுமாரன் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திரு. இ. இராசேந்திரம் அவர்கள்
    ரூபா 10,000/=

05. அமரர் பாக்கியலட்சுமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திருமதி ரேணுகா ஸ்ரீகுமாரன் அவர்கள்
    ரூபா 10,000/=

06. அமரர் சு.பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    பிரம்மஸ்ரீ பா. முரளீதரக் குருக்கள் அவர்கள்
    ரூபா 10,000/=

07. அமரர் காசிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திரு. கா. தவராசா அவர்கள்
    ரூபா 10,000/=

08. அமரர் சு.சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    கலாநிதி சு. சிவநாயகமூர்த்தி அவர்கள்
    முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
    ரூபா 10,000/=
    அணிபவர் :
    சு. தியாகலிங்கம், உபஅதிபர்.

09. அமரர் செல்லப்பா சதாசிவம், அமரர் திருமதி சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
    திரு. ச. திருச்செல்வராஜன் அவர்கள்
    சதா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்.
    ரூபா 10,000/= + 10,000/=

10. இவ்வாண்டு வழங்கப்பெற்ற பதக்கங்கள்:
    1. யூசிமாஸ் (Ucmas )யாழ்ப்பான நிறுவனத்தின் நிர்வாகி திருமதி R.பாஸ்கரன் அவர்களால் வழங்கப் பட்ட அன்பளிப்பு
       ரூபா 10,000/=
       பதக்கங்கள்
       அத்துடன் Ucmas மாணவர்களுக்கான விசேட பரிசுக் கிண்ணங்களும் வழங்கியுள்ளனர்.
    2. வேணி களஞ்சியம் பிரபல வர்த்தகர் திருவாளர் க. கங்கைவேணியன் அவர்களால் ரூபா 3000 பெறுமான முடைய பதக்கம் – 01

## பரிசுப் பொருள்களுக்கு அன்பளிப்பு வழங்கியோர் விபரம்:

| | பெயர் | அன்பளிப்புத் தொகை |
|---|---|---|
| 1. | திரு. எஸ். கரிகாலன் | 10,000/= |
| 2. | திரு. க. பஞ்சேந்திரன் | 5,000/= |
| 3. | திரு. க. மோகலிங்கம் | 5,000/= |
| 4. | திரு. எஸ். ஈழவேந்தன் | 5,000/= |
| 5. | திரு. எஸ். ஜெகதீஸ்வரன் | 3,000/= |
| 6. | திருமதி. விமலாதேவி பரமாட்சகபாலன் | 1,500/= |

## JICA செயற்றிட்டம்:

2006 ஆம் ஆண்டு JICA செயற்றிட்டத்தில் எமது பாடசாலை இணைக்கப்பட்டமை ஓர் வரலாற்று நிகழ்வாகும். யாழ் வலயப் பாடசாலைகளின் செயற்பாட்டுப் பாங்கிலான புள்ளிவழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் இது இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் 5"S" செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பாடசாலையின் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு, பௌதிக வளப்பயன்பாடு, மாணவரின் பண்புசார் விருத்தி, கற்றல் கவின் நிலை ஆகியவற்றில் கைசான் செயற்பாடுகள் முன்னெடுத்துச் சென்றதன் மூலம் கல்வித் தரமேம்பாடு இவ்வாண்டு உயர்வாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

## இழந்தகல்வி மீட்டல் செயற்றிட்டம்:

இவ்வாண்டில் கல்வி கற்கும் நாட்கள் பல நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இழக்கப்பட்டிருக்கின்றது. இக்கால கட்டத்தில் எமது ஆசிரியர்களின் அளப்பரிய பணியினால் இழந்தகல்வி மீட்டல் செயற்றிட்டத்தை உருவாக்கி வெற்றிகண்டுள்ளோம். பாடசாலை மூடப்பட்ட வேளையில் சகல மாணவர்களுக்குமான கற்றல் கையேடுகள் தயாரிக்கப்பட்டு பெற்றோர்கள் மூலம் வழங்கி மீண்டும் பெற்று திருத்தம் செய்யும் பணியில் ஒரு தனித்துவத்தை பாடசாலைக்குப் பெற்றுத் தந்த பெரும்பணி எமது ஆசிரியர்களையே சாரும். மேலும் பாடசாலை ஆரம்பித்த காலத்தில் மேலதிக விடுமுறை நாட்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கற்றற் செயற்றிட்டத்தை விரைந்து முன்னெடுத்துச் சென்றிருக்கின்றோம். இச்செயற்றிட்டத்திற்கு முழுமையாக பா. அ. சங்கமும், பழைய மாணவர் சங்கமும் ரூபா 48,000 ரூபா செலவினைப் பொறுப்பேற்று வழிப்படுத்தியமையையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## தமிழ் மன்றம்

**தலைவர் :** செல்வி தா. குணரஞ்சினி
**செயலாளர்:** திருமதி சி. விஜயகோபால்
**பொருளாளர்:** திருமதி த. தர்மரத்தினம்

தமிழ் மன்றமானது மாணவர்களின் தமிழ் அறிவை விருத்தி செய்வதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருவதுடன் பேச்சுத்திறன், வாசிப்புத் திறன், எழுத்துத்திறன், ஆக்கத்திறன் போன்றவற்றை மன்றத்தினூடாகவும், நற்சிந்தனை வாயிலாகவும், தமிழ் மொழியை விருத்தி செய்து வருதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பாடசாலை மட்டத்தில் தமிழ்த் தினப் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு தரங்களிலும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டும் வருகின்றன. பாடசாலை மட்டப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெறும் தரம் நான்கு, தரம் ஐந்துகளில் இருந்து கோட்ட, வலய, மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றி இவ்வாண்டும் சாதனைகள் படைத்துள்ளனர். தங்கப்பதக்கத்திற்கான திருக்குறள் மனனப் போட்டியில் இவ்வாண்டு 34 மாணவர்கள் தங்கப்பதக்கம் பெறுகின்றனர்.

## தமிழ்த்தினப் போட்டி – 2006:

**கோட்ட மட்டம்:**

| | |
|---|---|
| **பேச்சு** | |
| க. சரனிகா | 1ம் இடம் |
| **பாஓதல்:** | |
| வி. தேவசேனா | 2ம் இடம் |
| **ஆக்கத்திறன் வெளிப்பாடு** | |
| மு. பவித்திரா | 2ம் இடம் |
| **இசையும் அசைவும்** | |
| ம. திரிஷிகா | 2ம் இடம் |
| **வாசிப்பு:** | |
| சி. சன்முகேசன் | 3ம் இடம் |
| **நடனம் தனி:** | |
| க. ரிஷிவர்மன் | 2ம் இடம் |
| **குழு நடனம்:** | 2ம் இடம் |
| **நாடகம்:** | 1ம் இடம் |

**வலய மட்டம்:**

| | |
|---|---|
| **பேச்சு** | |
| க. சரனிகா | 1ம் இடம் |
| **பாஓதல்:** | |
| வி. தேவசேனா | 2ம் இடம் |
| **ஆக்கத்திறன் வெளிப்பாடு** | |
| மு. பவித்திரா | 2ம் இடம் |
| **இசையும் அசைவும்** | |
| ம. திரிஷிகா | 3ம் இடம் |
| **நடனம் தனி:** | |
| க. ரிஷிவர்மன் | 3ம் இடம் |
| **குழு நடனம்:** | 3ம் இடம் |
| **நாடகம்:** | 1ம் இடம் |

**மாவட்ட மட்டம்:**

| | |
|---|---|
| **பேச்சு** | |
| க. சரனிகா | 1ம் இடம் |
| **நாடகம்:** | 2ம் இடம் |

## இந்து மன்றம்

**தலைவர்:**
திரு. சு. தியாகலிங்கம் ( உபஅதிபர்)

**செயலாளர்:**
திருமதி நி. கிருபாகரன்

**பொருளாளர்:**
திரு. கா. முத்துக்கிருஷ்ணன்

சைவப்பாரம்பரிய விழுமியங்களையும், பண்பாடுகளையும் தன்னகத்தே இணைத்து செயற்படும் இப்பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் காலத்திற்குக் காலம் மரபுகள் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்துமன்றச் செயற்பாடுகளாக வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சமய வழிபாடும், கூட்டுப்பிரார்த்தனையும், குருபூசைக் கொண்டாட்டங்களும், நவராத்திரி வழிபாடுகளும் இடம்

பெற்றுவருகின்றன. எமது பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கொண்டலடி விநாயகப் பெருமானுக்கு வருடந்தோறும் ஆனி உத்தரத்தைப் பெருவிழாவாக எடுத்துவருகின்றோம். வாணி விழாக் காலத்தின்போது, சமய அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் சமயப்பேச்சு, பண்ணிசை, மாலை கட்டல், தோரணம் பின்னுதல், சகலகலாவல்லி மாலை முற்றோதல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்தும், சமயக் கலைகளைப் போற்றியும் வருகின்றோம். இப்பணியில் அனைத்து ஆசிரியர்குழாமும் வழிகாட்டிகளாகத் திகழ்கின்றனர்.

## விளையாட்டுத்துறை:

**இணைச்செயலாளர் :**

திரு. சு. தியாகலிங்கம் (உபஅதிபர்)

திருமதி மு. சுகிர்தா

**பொருளாளர்:**

திருமதி ரீ. கிருஷ்ணபாலா (பகுதித்தலைவர்)

மாணவர்கள் சிறந்த உடல்நலம் பெற்றவர்களாகவும், திடகாத்திரமான உடலுறுதி உடையவர்களாகவும், ஒழுக்கமும் நற்பண்பும் மிக்கவராகவும் திகழவேண்டும் என்ற உத்வேகத்துடன் விளையாட்டுத்துறையினர் செயலாற்றி வருகின்றனர். உடலுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்வை ஏற்படுத்தும் வினோத விளையாட்டுக்களும், உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற சிறுவர் பூங்கா விளையாட்டுக்களும் மாணவர்களின் பயன்பாட்டிற்குப் பெரிதும் உதவி வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் முதன்மைநிலை ஒன்று, முதன்மைநிலை இரண்டு, முதன்மைநிலை மூன்று என்ற வகையில் இரு இல்லமெய் வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந் நிகழ்வுகளின் சிறப்பு அம்சமாக இரு பான்ட் வாத்திய அணிவகுப்பும் பாடசாலையின் அதிகமான மாணவர்கள் பங்குகொள்ளும் உடற்பயிற்சி கண்காட்சியும் மனதைத் தொடவல்லன. இவற்றினைப் பயிற்றுவிப்பவர் களாகத் திகழும் திருமதி சு. முத்துக்குமாரு, செல்வி சீ. சுப்பிரமணியம், செல்வி க. தர்சினி, திரு. எஸ். துரைராசா, திருமதி வி. சக்திவேல் ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த அனைத்து ஆசிரியர்களும் பாராட்டத்தக்கவர்கள்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி – 2006

**முதன்மை நிலை 2, 3**

**முதன்மை விருந்தினர்**

திரு. கே. வி. குணசேகரம் அவர்கள்

கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

**மெய்வல்லுநர் தலைவன்**

செல்வன் சி. சர்வக்ஞன்

**மெய்வல்லுநர் தலைவி**

செல்வி ஏ. திவ்யா

**முதன்மை வீரர்கள்**

தரம் - 3 ஆண்: இ. சஜீந்திரா
பெண்: சி. ஆதிரை

தரம் - 4 ஆண்: சி. கோணேஸ்வரன்
பெண்: க. கஜானியா

தரம் - 5 ஆண்: ஸ்ரீஆனந்
பெண்: ஏ. திவ்யா

**முதன்மை நிலை - I**

**முதன்மை விருந்தினர்:**

திரு. சுவாமிநாதன் அவர்கள்

(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி, யாழ் கல்வி வலயம்.)

**மெய்வல்லுநர் தலைவன்:**

செல்வன் சு. செந்தூரன்

**மெய்வல்லுநர் தலைவி:**

செல்வி சி. அபிராமி

**முதன்மை வீரர்கள்:**

தரம் 1 ஆண்: ஜெ. ஹரிசாத்
பெண்: க. அஜந்தினி

தரம் 2 ஆண்: கௌ. சங்கமன்
பெண்: செ. துவாரகா

## யாழ் வலய மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டிய முதன்மை வீரன்

செல்வன் ச. கபிலன்

## சதுரங்கம்: (Chess)

யாழ் வலய சதுரங்கப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவில் வெற்றியைத் தட்டிக்கொண்ட வீரர்கள்

செல்வன் சு. வித்தியாசாகர்
செல்வன் தே. சுதேசன்
செல்வன் கௌ. லோகீசன்
செல்வன் ஸ்ரீ. நிரோயிதன்
செல்வன் ம. ஜீவஹாசன்
செல்வன் செ. லவினன்
செல்வன் ச. சபேசன்

இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்கள் (CHESS FEDERATION Of SRI LANKA)

செல்வன் கு. குணசிகா
செல்வன் த. தநுசியன்

## ஆங்கில மன்றம்:

**தலைவர்:**

திருமதி ரீ. கிருஷ்ணபாலா (பகுதித் தலைவர்)

**செயலாளர்:**

செல்வி ஓ. சுமதி

திருமதி இ. மனிவண்ணன்

**பொருளாளர்:**

திருமதி சி. அம்பிகைபாகன்

**பிரதமவிருந்தினர்:**

ஆங்கிலக் கல்வியானது கற்றல், கற்பித்தல் தொழிற்பாட்டில் சர்வதேச ரீதியாக எவ்வளவு முக்கிய மாக அமைந்துள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு தரம் ஒன்று தொடக்கம் வாய்மொழி ஆங்கிலமாக பரிணமித்து மிளிர்கின்ற அதேவேளை இலக்கண இலக்கியங்கள் மூலமாகவும் ஆங்கிலம் வினைத் திறன் உடையதாக மன்றத்தினூடாக கலை மாண வர்கள் நற்சிந்தனை மூலமாகவும், ஆங்கிலப்பாடல் நாடகம், உரையாடல் போன்றனவற்றை மன்றச் செயற்பாட்டு ரீதியாகவும் மாணவர்களுக்கு வளர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வருடந்தோறும் ஆங்கில தினப்போட்டிகள் நடாத்தி மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள், வழங்கி வருகின்றனர். நவீன கற்பித்தல் சாதனங் களுடன் ஆங்கிலத்துறையை வளம்படுத்தலுக்கு ஏற்ற வாய்ப்பான வள நிரம்பல்கள் உள்ளே வந்து கொண்டேயிருப்பது பிரகாசத்திற்கான அறிகுறியா கும். அத்துடன் கோட்டமட்ட, வலய மட்ட நிலைகளில் மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர். துறை நோக்கி உழைக்கும் ஆசிரியர்களை இச்சந்தர்ப்பத் திலே பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

### ஆங்கிலதினப் போட்டியில் வெற்றியீட்டியோர்:

**தரம் 3**

**கோட்ட மட்டம்:**

Recitation

| | |
|---|---|
| த. உமேஷ் | 2ம் இடம் |
| சி. சாம்பவி | 3ம் இடம் |

Copy Writing

| | |
|---|---|
| த. லக்ஷிகா | 1ம் இடம் |

**வலய மட்டம்:**

Recitation

| | |
|---|---|
| த. உமேஷ் | 3ம் இடம் |

Copy Writing

| | |
|---|---|
| த. லக்ஷிகா | 1ம் இடம் |

**தரம் - 4**

**கோட்ட மட்டம்:**

Recitation

| | |
|---|---|
| ம. திரிஷிகா | 1ம் இடம் |
| க. ரிஷிவர்மன் | 3ம் இடம் |

Copy Writing

| | |
|---|---|
| ஜெ. அபிராமி | 1ம் இடம் |
| ம. திரிஷிகா | 3ம் இடம் |

**வலய மட்டம்:**

Recitation

| | |
|---|---|
| ம. திரிஷிகா | 3ம் இடம் |

Copy Writing

| | |
|---|---|
| ஜெ. அபிராமி | 1ம் இடம் |

**தரம் - 5**

**கோட்ட மட்டம்:**

Recitation

| | |
|---|---|
| சி. சர்வக்ஞன் | 1ம் இடம் |

Copy Writing

| | |
|---|---|
| வ. சங்கவி | 3ம் இடம் |

## கவின்கலை மன்றம்:

**தலைவர்:**

திருமதி ரீ. கிருஸ்ணபாலா

**செயலாளர்:**

திருமதி வி. சந்திரசேகரன்

**பொருளாளர்:**

திருமதி நி. கிருபாகரன்

**இணை ஆசிரியர்கள்:**

செல்வி ஓ. சுமதி

திரு. சி. துரைராசா

செல்வி க. குவேனி

திருமதி இ. மனிவண்ணன்

திருமதி கா. நாகராசா

திரு. வே. அன்பழகன்

திரு. க. இராசலிங்கம்

அழகியற் செயற்பாடுகளை வினைத்திறன் உடையதாக மாற்றும் வகையில் கவின்கலை மன்றம் செயலாற்றி வருகின்றது. வாணிவிழா, பெற்றோர் தினவிழா, தமிழ்த்தின விழா, பரிசளிப்புவிழா, பண் ணிசை, ஆங்கிலதின விழாக்களில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளை கவின்கலை மன்றம் முன்னின்று நடத்தி விழா சிறப்புற அமைய தன்னாலான பணி யாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மன்றம் இனிதே செயற்பட எனது வாழ்த்துக்களை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## கணனித்துறை:

**இணை ஆசிரியர்கள்:**

*திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்*
*திருமதி ஓ. ஜெகதீசன்*

எமது பாடசாலை ஆரம்ப பிரிவைக் கொண்டிருந்தாலும் கூட கணனித்துறையில் அதிகமான மாணவர்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள். மாணவர்களின் பயன்பாட்டிற்கு உரியனவாக உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தவகையில் இவ்வாண்டில் தரம் 5 ல் கல்வி பயிலும் 238 மாணவர்களும், தரம் 4 இல் கல்வி பயிலும் 226 மாணவர்களும் இதுவரை கணனிப் பயிற்சியின் ஆரம்ப நிலையை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாண்டு IDM நிறுவனத்தின் அனுசரணையுடன் பெற்றோர்களின் ஒத்துழைப்பின் பேரில் தரம் 1, 2 வகுப்பு மாணவர்களில் 167 மாணவர்கள் கணனிப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர். இதில் தரம் 1 இல் இருந்து 21 மாணவர்களும், தரம் 2 இலிருந்து 23 மாணவர்களும் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

## மாணவர் முதல்வர் குழு:

**ஆசிரிய ஆலோசகர்:**

*திரு. சு. தியாகலிங்கம்*

**பொறுப்பாசிரியர்கள்:**

*திருமதி ரீ. கிருஸ்ணபாலா*
*திருமதி ல. மகாலிங்கம்*
*திரு. பொ. ஜெகானந்தராசா*
*திரு. கா. முத்துக்கிருஷ்ணன்*
*திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்*
*திருமதி மு. சுகிர்தா*
*திருமதி கா. நாகராசா*
*திருமதி வ. சோமசுந்தரம்*
*திருமதி இ. முத்துக்குமார்*

**சிரேஷ்ட மாணவ முதல்வர்கள்:**

*செல்வன் கி. சன்முகேசன்*
*செல்வி வ. சங்கவி*

பாடசாலையின் ஒழுக்க விதிகளுக்கு அமைய மாணவர்கள் பண்பாடு, கலாசாரங்களைப் பேணும் முகமாகவும், நிர்வாகத்துறைக்கு உதவும் முகமாகவும் மாணவர் முதல்வர் குழுவினர் செயலாற்றி வருகின்றனர். ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப தமது கடமையை உணர்ந்து பொறுப்புமிக்க பணிகளை ஆற்றும் பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

## சென்ஜோன்ஸ் முதலுதவிப்படை:

**பொறுப்பாசிரியர்கள்:**

*திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்*
*செல்வி யோ. வாசுகி*

எமது பாடசாலையில் அதிகமான மாணவர்களை உள்ளடக்கி இம் முதலுதவிப் படையினர் செயற்படுகின்றனர். வருடந்தோறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் சின்னம் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றுவருகின்றன. பாடசாலையின் ஒழுக்க விதிகளுக்கு ஏற்ப சிறந்த பணியாற்றும் அணியாகச் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அண்மையில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தினர் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு பொறுப்பாசிரியர்களினூடாகப் பயிற்றுவித்து வருகின்றனர். ஆரம்ப மாணவர்கள் திறமையும் துடிப்பும் மிக்கவர்களாக விளங்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## விசேட கல்வி:

**பொறுப்பாசிரியாகள்:**

*திருமதி. வ. சோமசுந்தரம்*
*திருமதி ம. பத்மநாதன் அவர்கள்*

சென்றவாண்டு முதல் பாடசாலையில் உள நெருக்கீடுகளுக்கு உட்பட்டுள்ள பிள்ளைகளுக்கும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்குமான கல்வியில் கவனம் செலுத்தும் வகையில் பயிற்சியுடன் கூடியதுறை உருவாக்கப்பட்டுள்ளது. **'சாந்திகம்'** போன்ற உளவளத்துணை ஆளணியினர் வருகை தந்து விசேட பயிற்சியையும் ஆசிரியர்களுக்குப் போதிப்பதுடன், அது தொடர்பான செயலாற்றுகைப் பயிற்சியையும் வழங்கி வருகின்றனர். அவர்களின் சேவை பாராட்டுக்குரியவை.

## ஆசிரியர் கழகம் – 2006:

**தலைவர்:**

*திரு. சு. தியாகலிங்கம்*

**செயலாளர்:**

*திருமதி ரீ. கிருஸ்ணபாலா*

**பொருளாளர்:**

*திருமதி சி. விஜயகோபால்*

ஆசிரியர்களின் நலனைக்கருத்தில் கொண்டு இக்கழகம் செயலாற்றி வருகின்றது. பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றுவதுடன், ஓய்வு

பெறும், இடமாற்றம் பெறும் ஆசிரியர்களைத் தக்க முறையில் கௌரவித்தும் அவர்களின் நன்மை, துயர்களில் தனது பங்களிப்பைச் சிறந்த முறையில் வழங்கியும் வருகின்றது. புதிதாகப் பாடசாலைக்கு வருகைதந்த ஆசிரியர்களையும் இன்முகத்துடன் வரவேற்று ஆசிரியர் கழகத்தில் இணைத்துக் கொள்வதும் இக்கழகத்தின் சிறப்பம்சமாகும். இக்கழகம் சிறப்புற அமைய எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## செயற்பாடுகளும் தேவைகளும்:

1. **நூலகம்:**

**பொறுப்பாசிரியர்:**

*திருமதி ஓ. ஜெகதீசன்*

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை இளமை தொட்டு விருத்திசெய்ய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளோம்.

நூலகத்தில் உள்ள நூல்கள் மிகவும் குறைவாகவுள்ளமையால் நூல்களின் தேவை கருதி இம்முறையும் நூலகவாரம் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டபோது அதிக மாணவர்கள் நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்தனர். பிறந்ததினக் கொண்டாட்டத்தின் போதும் மாணவர்கள் நூல்களை வழங்கி அன்பளிப்புச் செய்தல் மூலம் இவ்வாண்டும் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் அன்பர்கள் அபிமானிகள் மூலம் நூல்களைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமாகவுள்ளோம்.

## விளையாட்டு மைதானம்:

எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லை என்பது பெரும் குறையாகும். எம்மிடமிருந்த சிறிய நிலப்பரப்பில் முழுமையாக கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் விசாலமான மைதான நிலத்தைக் கொள்வனவு செய்யவேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைச் சமூகத்தின் முக்கிய இலக்காகும். இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டு புதிய இருமாடிக் கட்டிட வேலைகளை நிறைவுசெய்து தற்போது தரம் 1 இயங்கும் பழைய கட்டடத்தை நீக்குவதன் மூலம் உள்ளக விளையாட்டு மைதானத்தை உருவாக்குவதற்கான பணியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் அயராது உழைத்து வருகின்றன. இம் முயற்சி அடுத்த ஆண்டு முற்பகுதியில் நிறைவேற்றப் பட்டுவிடும் என்ற நம்பிக்கையை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

## ஆரம்பக்கல்வி வளநிலையம்:

கற்றல், கற்பித்தலில் வினைத்திறனை அதிகரிக்க இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வி வளநிலையம் ஒன்று அத்தியாவசியமானதாகும். அதற்கான முயற்சிகள் சென்ற ஆண்டிலே முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் நிறைவான ஓர் வளநிலையமாக ஓரளவு செம்மைக்குட்பட்ட ஓடியோ வீடியோ சாதன அறை அமைக்கப்பட்டுள்ளது. கற்றல் தொழில் நுட்பசாதனங்கள் பலவும் வந்து சேர்ந்த வண்ணமேயுள்ளது. அடுத்த ஆண்டு இலங்கையில் வியக்கத்தக்க நவீன கற்பித்தல் செயன்முறையில் என்றுமில்லாத புதுமையை இப்பாடசாலை படைக்கும் என்ற நம்பிக்கையை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## சுத்தமும் சுகாதாரமும்:

**பொறுப்பாசிரியர்கள்:**

*திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்*
*திருமதி M.P.R. கனகரட்ணம்*
*திருமதி இ. முத்துக்குமார்*
*திருமதி வி. சக்திவேல்*
*செல்வி யோ. வாசுகி*
*செல்வி ச. சுந்தரேஸ்வரி*
*செல்வி ப. அன்புமொழி*
*திருமதி ரா. சசிதரன்*
*திருமதி வா. சோமசுந்தரம்*
*திருமதி ம. பத்மநாதன்*
*திருமதி பி. தியாகலிங்கம்*
*திரு. க. சிவஞானம்*

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் சுத்தமும் சுகாதாரமும் பேணப்பட வேண்டியதொன்றாகும். வகுப்புச்சுத்தம், புறச்சுத்தம் ஆகியவற்றுடன் தற்சுத்தமும் இங்கு அவதானிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் இங்கு கடைப்பிடிக்கும் சுத்தமும் சுகாதாரப் பழக்கவழக்கங்களும் வீட்டிலும் அதனைத் தொடர்ந்து வாழ்க்கையிலும் எடுத்துச் செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் **'சுகாதாரக் குழு'** அமைத்து அதற்குப் பொறுப்பான ஆசிரியரும் மாணவர்களும் சிறப்புடன் செயலாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:

பாடசாலை அபிவிருத்திக்கு பெருமளவு உதவி செய்யும் அமைப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விளங்குகின்றது. பாடசாலையின் கல்வி

அபிவிருத்தி, வள அபிவிருத்தி, பௌதிக அபிவிருத்தி ஆகியவற்றில் முற்றுமுழுதாக பெற்றோர்களின் பூரண பங்களிப்புடன் செயலாற்றி வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் கௌரவ செயலாளராக திரு. பொ. குகநாதன் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அவர்களும், அவர் சார்ந்த உறுப்பினர்களும், நலன் விரும்பிகளும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2005 ஆம் ஆண்டு செயலாற்றிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் செயற்பாடுகள் மிகவும் பயன்மிக்கவையாக அமைந்தன. அக்காலத்தில் சங்க நிர்வாகிகளாக இருந்து பணியாற்றிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். எமது பாடசாலையில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற அனைத்து அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பொருளாளர் மற்றும் உறுப்பினர்களையும் பாராட்டி நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## பழைய மாணவர் சங்கம்:

இப்பாடசாலையின் வளர்ச்சியின் மற்றுமொரு வடிவமாக உதவிவரும் அமைப்பே பழைய மாணவர் சங்கமாகும். இதன் தலைவராகக் கலாநிதி S. T. B இராஜேஸ்வரன் புவியியற்றுறை யாழ். பல்கலைக் கழகம் அவர்களும் கௌரவ செயலாளராக யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை தலைவர் திருவாளர் க. அருள்வேல் அவர்களும், பொருளாளராக திருவாளர் தி. இராஜேந்திரம் அவர்களும் விளங்குகின்றார்கள். இவர்களோடு இணைந்த நிர்வாக சபை அமைப்பே பாடசாலை வளர்ச்சியின் பக்கபலமாக இருந்து வருகின்றது. பாடசாலையின் பாரம்பரிய பண்புகள், அவசிய தேவைகள் நவீனத்துவக்கல்வி வாய்ப்புக்கள் நீண்ட பௌதீக இலக்குகள் ஆகியவற்றினை தேவை நோக்கி பூர்த்தி செய்வதில் பாடசாலை நிர்வாகத்தினருக்கு பேருதவி புரிந்து வருகின்றது. இப்பணியில் ஒன்றி நிற்கும் தலைவர், செயலாளர், பொருளாளரோடு இணைந்த நிர்வாக உறுப்பினர் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும், நன்றியையும் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## நன்றியும் நிறைவும்:

இப்பாடசாலையின் முகாமைத்துவத்தில் பங்காற்றி உறுதுணையாக, அளப்பரிய பணியை நல்கி இத்தகைய வெற்றி நிகழ்வுகளுக்கு வித்திட்ட என் அன்பிற்குரிய பிரதி அதிபர் திரு. சு. தியாகலிங்கம் அவர்களுக்கும், பகுதித் தலைவர்கள் திருமதி ல. மகாலிங்கம் திருமதி M. P. R. கனகரத்தினம் அவர்களுக்கும், திரு. பொ. ஜெகானந்தராஜா அவர்களுக்கும் தரஇணைப்பாளர்களுக்கும், ஆசிரியர்கள் அனைவருக்கும் முதற்கண் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எமது அன்பிற்குப் பாத்திரமானவரும் விவசாய உயிரியல்துறைத் தலைவருமாகிய கலாநிதி. கு. மிகுந்தன் அவர்கள் இன்று ஆற்றிய பிரதம விருந்தினர் உரைக்காகவும், அவரது பாரியார் திருமதி து. மிகுந்தன் அவர்கள் மாணவர்களுக்குத் தங்கள் கரங்களால் பரிசில் வழங்கி மேன்மைப்படுத்தியமைக்காகவும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமையும் பேருவகையும் அடைகிறேன்.

இவ்விழாவிற்குத் தாராள ஒத்துழைப்பினை நல்கிய பெற்றோர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் நலன்விரும்பிகளுக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும் பெருமகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பரிசில்களுக்குரிய மாணவச் செல்வங்களுக்கு ஆண்டுதோறும் தமது அன்புத் தந்தையார் **அமரர் ஈஸ்வரபாதம்** அவர்களின் ஞாபகார்த்த பரிசில்களை அள்ளி வழங்கும் திரு. ஈ. சரவணபவன் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களின் உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விப் பணியில் கருத்தூன்றிச் செயற்படும் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், கல்வித்திணைக்களப் பதவிநிலை உத்தியோகத்தர்கள், கட்டடப் பொறியியலாளர், தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று பரிசில்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கும், பரிசில்களைப் பெறத் துடித்துக் கொண்டிருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும். சிறப்பாக இவ்விழாக் குழுவினருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்காளிகளாகவும், பார்வையாளர்களாகவும் இருந்து உற்சாகமூட்டிய அனைத்து உள்ளங்களுக்கும். தங்கப்பதங்கங்களை அன்பளிப்புச் செய்தோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வறிக்கையைச் சிறந்த முறையில் குறுகிய கால அவகாசத்தில் அட்சிட்டுத் தந்த பாரதி பதிப்பகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்

*திரு. வே. ஞானகாந்தன்,*
*அதிபர்*

# பாடசாலைக் கீதம்

ஆர்வமுடன் பாடுவோம் – யாழ் இந்து
ஆரம்ப பாடசாலை சீரும் சிறப்பு மோங்க (ஆர்வமுடன்)

### அனுபல்லவி

பேர் பெற்ற யாழ். நகர் பிறங்கு முயர் கல்லூரி
வாரிசு தாயென வயங்கி ஒளி தரவே (ஆர்வமுடன்)

### சரணம்

அன்பர்க்கருளுமெழில் கொண்டல் விநாயகனின்
இன்பத் திருவருளால் என்று முயர்ந்து அன்னை
நின்று புகழ்பரப்பி குன்றின் விளக்கெனவே
என்றுஞ் சிறார் பணிந்து ஏத்தி வணங்கிடவே (ஆர்வமுடன்)

செய்முறை செயன் முறை திகழுமாரம்ப நிலைக்
கல்வி கலை வகைகள் கவினுறவே தேர்ந்து
உய்ய நம் பாலர்கள் உதவி யியலிசையும்
நல்ல நாடக மூலம் நவிலுமழகு கண்டு (ஆர்வமுடன்)

முந்து தமிழ் வளர்க்கு மெங்கள் தனிச் செல்வமாம்
இந்து ஆரம்ப பாடசாலை யிலங்கதிபர்
செந்தமிழ் ஆங்கிலம் தேன்னென வூட்டுமாசான்
சந்ததம் வாழிய வாழிய தாயென்றே. (ஆர்வமுடன்)

வணக்கம்

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்